# பா.ஜ.க. ஆளும் மணிப்பூரில் மீண்டும் வன்முறை!

## உக்ருல் மாவட்டத்தில் நிகழ்ந்த துப்பாக்கிச் சூட்டில் 3 பேர் உயிரிழந்தனர்!

இம்பால், ஏப். 26-
மணிப்பூர் மாநிலம், உக்ருல் மாவட்டத்தின் சில பகுதிகளில் குகிநாகா சமூகத்தைச் சேர்ந்த ஆயுதம் ஏந்திய நபர்களிடையே அண்மை காலமாக தொடர்ச்சியான மோதல்கள் நடைபெற்று வருகின்றன.

இதில் பலர் பலியாகியுள்ளனர், வீடுகள் தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், உக்ருல் மாவட்டத்தில் இரு சமூகத்தினரிடையே மீண்டும் வன்முறை வெடித்துள்ளது.துப்பாக்கிச் சூட்டில் 3 பேர் உயிரிழந்தனர்.

பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட பலர் காயமடைந்தனர். இரண்டு வீடுகள் தீயிட்டு கொளுத்தப்பட்டன. மணிப்பூரில் கடந்த 2023இல் பெரும் கலவரம் வெடித்த நிலையில், இதுவரையிலான வன்முறைச் சம்பவங்களில் 500க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துவிட்டனர். வீடுகளைவிட்டு வெளியேறிய ஆயிரக்கணக்கானோர், அரசின் நிவாரண முகாம்களிலேயே தங்கியுள்ளனர்.

---

### ஐ.ஐ.டி. - ஐ.ஐ.எஸ்.சி. உயர்கல்வி நிறுவனங்களில் சேர

# ஒருங்கிணைந்த முதன்மைத் தேர்வுக்கு விண்ணப்பப் பதிவு!

## மே-2 வரை விண்ணப்பிக்கலாம்!

சென்னை, ஏப்.26-
மே 17ம் தேதி நடைபெறும் ஜேஇஇ பிரதான தேர்வுக்கான விண்ணப்ப பதிவு ஏப்.23 அன்று தொடங்கியது. ஐஐடி, ஐஐஎஸ்சி போன்ற மத்திய உயர்கல்வி நிறுவனங்களில் இளநிலைப் படிப்புகளில் சேர, ஒருங்கிணைந்த நுழைவுத் தேர்வில் (ஜேஇஇ) தேர்ச்சி பெற வேண்டும். இது முதன்மைத் தேர்வு, பிரதானத் தேர்வு என 2 கட்டங்களாக நடத்தப்படுகிறது.

2026ஆம் ஆண்டுக்கான முதன்மைத் தேர்வு ஜனவரி, ஏப்ரல் மாதங்களில் நடத்தி முடிக்கப்பட்டன. இதில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பிரதானத் தேர்வு மே 17ம் தேதி நடத்தப்பட உள்ளது.

இதற்கான இணையதள விண்ணப்ப பதிவு ஏப்.23 அன்று தொடங்கியது.

தகுதியான மாணவர்கள் https://jeeadv.ac.in இணையதளம் வாயிலாக மே 2ம் தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும். இந்த ஆண்டில் இத்தேர்வை ரூர்க்கி ஐஐடி நடத்துகிறது. காலை, மதியம் என 2 தாள்களாக தேர்வு நடைபெறும்.

---

# சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு 14,508 சிறப்புப் பேருந்துகள் இயக்கம்!

## அரசு விரைவுப் போக்குவரத்து மேலாண் இயக்குநர் தகவல்!

சென்னை, ஏப். 26–
2026 சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு பொதுமக்கள் சிரமமின்றி தங்கள் சொந்த ஊர்களுக்கு பயணம் செய்திடவும் வாக்குபதிவு முடித்து சென்னை மற்றும் பிற ஊர்களுக்கு திரும்பிடும் வகையில் தினசரி இயக்க கூடிய பேருந்துகளுடன் சிறப்பு பேருந்துகள் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து தேர்தல் முடிந்த பின்னர் 25/04/2026 மற்றும் 26/04/2026 ஆகிய நாட்களில் பொதுமக்கள் சிரமமின்றி சென்னைக்கும் மற்ற ஊர்களுக்கும் பயணம் செய்திட ஏதுவாக 25/04/2026 அன்று தினசரி இயக்ககூடிய 2092 பேருந்துகளுடன் கூடுதலாக 1295 பேருந்துகளும் முக்கிய ஊர்களிலிருந்து பல்வேறு இடங்களுக்கு 2500 சிறப்பு பேருந்துகளும், 26/04/2026 அன்று சென்னைக்கு தினசரி இயக்க கூடிய 2092 பேருந்துகளுடன் 3184 சிறப்பு பேருந்துகளும் பிற ஊர்களுக்கு 3345 சிறப்பு பேருந்துகளும் ஆக ஒட்டு மொத்தமாக 14508 பேருந்துகளும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், 25/04/2026 சனிக்கிழமை 19676 பயணிகளும் 26/04/2026 ஞாயிறு அன்று 47001 பயணிகளும் முன்பதிவு செய்து பயணிக்க உள்ளனர். இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளதால் தொலைதூர பயணம் மேற்கொள்ள இருக்கும் பயணிகள் கூட்ட நெரிசலை தவிர்க்கும் பொருட்டு தங்களது பயணத்திற்கு WWW.TNSTC.IN மற்றும் MOBILE APP மூலம் முன்பதிவு செய்து பயணிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இச்சிறப்பு பேருந்து இயக்கத்தினை கண்காணிக்க அனைத்து பேருந்து நிலையங்களிலும் போதிய அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

எனவே, பயணிகள் மேற்கூறிய வசதியினை பயன்படுத்தி தங்களது பயணத்தினை மேற்கொள்ள இதன் மூலம் கேட்டுக்கொள்ளப்படுகிறது என்று அரசு விரைவு போக்குவரத்து மேலாண் இயக்குநர் ஆர்.மோகன் தெரிவித்துள்ளார்.

---

### தமிழகத்தில் தேர்தல் ஆணையம் ஒருதலைபட்சமாக உள்ளது!

# அ.தி.மு.க.வினரிடம் இருந்தே அதிக அளவில் பணம் கைப்பற்றப்பட்டுள்ளது!

## போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்,எஸ்,சிவசங்கர் குற்றச்சாட்டு!



அரியலூர், ஏப். 26-
அரியலூர் மாவட்டம் ஆண்டிமடம் ஒன்றியம் தேவனூரில் உள்ள அரசு ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் குடும்பத்துடன் தனது வாக்கினை பதிவு செய்தார்

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஆதரவான அலை தேர்தலில் காணப்படுகிறது மீண்டும் திராவிட மாடல் 2.0 ஆட்சி முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் தலைமையில் ஆட்சி அமைவது உறுதி. எந்தவித புகாரும், காரணமும் இல்லாமல் முக்கிய அரசு உயர் அதிகாரிகள் தேர்தலுக்கு சில நாட்களே இருக்கும் நிலையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது பெருத்த சந்தேகத்தை ஏற்படுத்தி உள்ளது.

தேர்தல் ஆணையம் பா.ஜ.க.வின் கைப்பாவையாக செயல்படுகிறது குன்னம் சட்டமன்ற தொகுதியில் தையல் மிஷின் டோக்கன் கொடுத்து வாக்குகளை பெற்று விடலாம் என அ.தி.மு.க. கூட்டணி யின் ஐ.ஜே.கே. வேட்பாளர் எண்ணுகிறார் இது மக்களை ஏமாற்றும் வேலை என குன்னம் தொகுதி வாக்காளர்கள் நன்கு உணர்வார்கள் தி.மு.க. மீது பண பட்டுவாடா என்ற குற்றச்சாட்டை கூறி ஒரு சில தொகுதிகளில் தேர்தலை நிறுத்தி விடலாம் என அ.தி.மு.க. எண்ணுகிறது.

ஆனால் தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் அ.தி. மு.க.வினர்களிடமிருந்து தான் பணம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது

தமிழகத்தில் 200 இடங்களில் திராவிட முன்னேற்றக் கழகம் வென்று முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் இரண்டாவது முறையாக முதலமைச்சராக பொறுப்பு ஏற்பார் கழகம் 7வது முறையாக ஆட்சி அமைக்கும் என அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் கூறினார்.

---

# உதயசூரியன் நமது மடியில்...

எழு ஞாயிறே...
காலைக் கதிரவனே...
உன் உதயமே... எங்கள் விடியல்...
இன்று மட்டும் உதய சூரியன்
எங்கள் மடியில்...

திரையில் ஓடுவது படம்... அது
தரையில் ஓடி மக்களைக் காக்குமா?

அரோகரா என்றால் ஆன்மிகம்
சகோதரா என்றால் அரசியல்...!
தம்பி வா... தலைமை ஏற்க வா...!
மாங்குயில் பாடுமிடத்தில்...
கோட்டான்கள் குறை சொல்வதோ?

காக்கைகள் கூடலாம் ஒரு கோடி
மயில்தானே தேசிய சின்னம்.
அடிமை ஒருவன் முடி சூடினால்
எங்கே போகும் சுதந்திரம்?

அறியாத கூட்டமல்ல...
நம் மறவர்
கூட்டம்...!

மானம் பெரிதென உயிர் விடுவான்
மற்றவர்க்காக துயர் படுவான்.
தானம் வாங்கிட கூசிடுவான்
தருவது மேலென பேசிடுவான்.

சகோதர யுத்தம்... தடைபோட்டதால்
தனிநாடு தவறியது அண்டைய தமிழர் பூமியில்.
அப்படி ஒரு காட்சி வேண்டுமோ தாய்நாட்டில்.
ஆகவே உதய சூரியன்
நமது மடியில்...



**வி.செ.குகநாதன்**
திரைப்பட இயக்குநர்

---

### சென்னையில் உள்ள

# 3 வாக்கு எண்ணும் மையங்களில் 540 கண்காணிப்பு கேமராக்கள்!

## 24 மணி நேரமும் தொடர் கண்காணிப்பு!

சென்னை, ஏப். 26
சென்னையில் உள்ள 3 வாக்கு எண்ணும் மையங்களில் 540 கண்காணிப்பு கேமராக்கள் நிறுவப்பட்டுள்ளன. அங்கு 4 அடுக்குப் பாபுகாப்பு போடப்பட்டுள்ளது.

தமிழகத்தில் ஏப்.23 அன்று நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் இதுவரை இல்லாத உச்சபட்ச அளவாக 85.15 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன. கடந்த 2011 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் 78.29 சதவீத வாக்குகளே பதிவான நிலையில், தற்போதைய தேர்தல் புதிய சாதனை படைத்துள்ளது.

தமிழகத்தில் வாக்குப்பதிவு நிறைவடைந்த தும். வாக்குப்பதிவு இயந்திரங்களுக்கு சீல் வைக்கப்பட்டு, அவை பாதுகாப்பாக வாக்கு எண்ணும் மையங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டன.

அதன்படி, சென்னையில் உள்ள 16 சட்டமன்றத் தொகுதிகளுக்கான வாக்கு எண்ணிக்கை, ராணிமேரி கல்லூரி, லயோலா கல்லூரி மற்றும் கிண்டி அண்ணா பல்கலைக்கழகம் ஆகிய மூன்று முக்கிய மையங்களில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வாக்குப்பதிவு முடிந்தவுடன், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் வாக்குப்பதிவு இயந்திரங்கள் சீல் வைக்கப்பட்டு, பலத்த போலீஸ் பாதுகாப்புடன் வாகனங்களில் கொண்டு செல்லப்பட்டன.

அதன்படி, ராணிமேரி கல்லூரிக்கு டாக்டர் ராதா கிருஷ்ணன் நகர், திரு.வி.க. நகர், ராயபுரம், துறைமுகம், சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி ஆகிய தொகுதிகளின் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் இங்கு கொண்டு செல்லப்பட்டன.

லயோலா கல்லூரிக்கு, பெரம்பூர், கொளத்தூர், வில்லிவாக்கம், எழும்பூர், ஆயிரம்விளக்கு மற்றும் அண்ணாநகர் ஆகிய 6 தொகுதிகளுக்கான மின்னணு வாக்குப்ப திவு இயந்திரங்கள் இங்கு கொண்டு செல்லப்பட்டன.

கிண்டி அண்ணா பல்கலைக்கழகத்திற்கு விருகம்பாக்கம், சைதாப்பேட்டை, தியாகராயநகர், மயிலாப்பூர் மற்றும் வேளச்சேரி ஆகிய 5 தொகுதிகளுக்கான வாக்குப பதிவு இயந்திரங்கள் இங்கு கொண்டு செல்லப்பட்டன.

வருகிற மே 4ஆம் தேதி வாக்குகள் எண்ணப்பட உள்ள நிலையில், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் இந்த 3 மையங்களில் உள்ள 'ஸ்ட்ராங் ரூம்' எனப்படும் பாதுகாப்பு அறைகளில் வைக்கப்பட்டு சீல் வைக்கப்பட்டன.

இந்த 3 மையங்களிலும் நான்கு அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

முதல் அடுக்கில் உள்ளூர் காவல்துறை, இரண்டாம் அடுக்கில் ஆயுதப்படை போலீசார், மூன்றாம் அடுக்கில் மத்திய பாதுகாப்புப் படை யினர் மற்றும் நான்காம் அடுக்கில் கண்காணிப்பு மற்றும் நுழைவுக் கட்டுப்பாட்டு அமைப்புகள் என விரிவான பாதுகாப்பு செயல்படுத்தப்பட்டுள்ளது. துப்பாக்கி ஏந்திய போலீசார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

ஒவ்வொரு மையத்திலும் சுழற்சி முறையில் சுமார் 500 பாதுகாப்புப்பணியாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டு, 24 மணி நேரமும் இடையறாத கண்காணிப்பு மேற் கொள்ளப்படுகிறது.

ஒவ்வொரு வாக்கு எண்ணிக்கை மையத்திலும் இரண்டு நிலைய அலுவலர்கள் தலைமையில் 15 தீயணைப்பு வீரர்கள் சுழற்சி முறையில் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இரண்டு தீயணைப்பு வண்டிகள், 10 கையடக்க தீயணைப்புக் கருவிகள் மற்றும் மணல் நிரப்பப் பட்ட வாலிகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. இரண்டு ஆம்புலன்ஸ் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

ராணிமேரி கல்லூரியில் 172, அண்ணா பல்கலைக்கழகத்தில் 180, லயோலா கல்லூரியில் 188 என, மூன்று மையங்களிலும் சேர்த்து மொத்தம் 540 சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட்டு, 24 மணி நேரமும் கண்காணிக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக, 3 மையங்களிலும் மினி கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டு பாதுகாப்பு பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

அனுமதியின்றி யாரும் மையங்களுக்குள் நுழைய முடியாதபடி கடுமையான சோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகள் மற்றும் அரசியல் கட்சிகளின் முகவர்கள் மட்டுமே குறிப்பிட்ட நேரங்களில் வளாகத்திற்குள் அனுமதிக்கப்படுகின்றனர்.

---

### மே 24ஆம் தேதி வரை - பாகிஸ்தான் விமானங்களுக்கு

# இந்திய வான்வெளியில் பறப்பதற்குத் தடை நீட்டிப்பு!

புதுடெல்லி, ஏப்.26-
இந்திய வான்வெளியில் பாகிஸ்தான் விமானங்கள் பறப்பதற்கு விதிக்கப்பட்ட தடையை மே 24ம் தேதி வரை மத்திய அரசு நீட்டித்துள்ளது.

ஜம்மு காஷ்மீரின் பஹல்காமில் கடந்த ஆண்டு ஏப்ரல் 22ம் தேதி பாகிஸ்தான் தீவிரவாதிகள் நடத்திய கொடூர தாக்குதலில் 26 பேர் உயிரிழந்தனர். இதையடுத்து ஏப்ரல் 30ம் தேதி, இந்திய வான் வெளியில் பாகிஸ்தான் விமானங்கள் பறப்பதற்கு மத்திய அரசு தடை விதித்தது. ஆனால் இந்தியாவுக்கு முன்னதாகவே, மே 24 முதல் இத்தகைய தடையை பாகிஸ்தான் விதித்தது. பாகிஸ்தான் வான்வெளியில் இந்திய விமானங்கள் பறக்க தடை விதிக்கப்பட்டது.

இரு நாடுகளும் தங்கள் வான்வெளியை மற்ற நாட்டின் விமானங்களுக்கு மூடுவதற்கான தடையை கடந்த ஆண்டு ஏப்ரல் முதல் மாறி மாறி நீட்டித்து வருகின்றன. பாகிஸ்தான் தனது வான்வெளி தடையை கடந்த செவ்வாய்க்கிழமை மே 24 வரை நீட்டித்தது.

இந்நிலையில் மத்திய அரசு புதன்கிழமை வெளியிட்ட விமானிகளுக்கான அறிவிப்பு (NOTAM) ஒன்றில் "பாகிஸ்தான் விமானங்கள் (ராணுவ விமானங்கள் உட்பட) இந்திய வான் வெளியை பயன்படுத்த இயலாது. இந்த தடை மே 23ம் தேதி 23:59 மணி (UTC) வரை அமலில் இருக்கும். இந்திய நேரப்படி (IST) மே 24ம் தேதி காலை 05:30 மணி வரை அமலில் இருக்கும்" என்று கூறப்பட்டுள்ளது. இரு நாடுகளின் இந்த நடவடிக்கை ஓராண்டாக நீடித்து வருவது குறிப்பிடத்தக்கது.

பஹல்காம்தாக்குதலுக்கு பதிலடியாக பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் செயல்பட்டு வந்த 9 தீவிரவாத முகாம்களை ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கை மூலம் இந்தியா தாக்கி அழித்தது. மேலும் சிந்து நதி நீர் ஒப்பந்தத்தை இந்தியா ரத்து செய்தது.

---

# மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பாதுகாப்பாக வைத்தல்!

## தமிழ்நாடு தலைமைத் தேர்தல் அதிகாரி தகவல்!

சென்னை, ஏப்.26–
தமிழ்நாடு சட்டமன்ற பேரவைக்கான பொதுத் தேர்தல் 23.04.2026 அன்று 75,064 வாக்குச்சாவடிகளில்வெற்றிகரமாக நடத்தப்பட்டுள்ளது.

வாக்குப்பதிவு நிறைவடைந்த பின்னர், வாக்குகள் பதிவு செய்யப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களும் (EVM) வாக்காளர் தாம் அளித்த வாக்கினைச் சரிபார்க்கும் கருவிகளும் (VVPAT), தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் / அவர்களின் பிரதிநிதிகள் மற்றும் இந்தியத் தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்ட மத்தியப் பார்வையாளர்(கள்) முன்னிலையில், இந்தியத் தேர்தல் ஆணையத்தால் வரையறுக்கப்பட்ட பாதுகாப்பு நெறிமுறைகளின்படி அதாவது, காப்பறைக்கு இரண்டடுக்கு ஆயுதமேந்திய பாதுகாப்பு (குறைந்தபட்சம் 1 படைப்பிரிவு அளவிலான ஆயுதமேந்திய பாதுகாப்புப் படை), 24x7 கண்காணிப்பு காமிரா முதலிய ஏற்பாடுகளுடன் வீடியோ பதிவு செய்யப்பட்டு, தொடர்புடைய காப்பறைகளில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.

இருப்புக் காப்பிலுள்ள (RESERVE) மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களும் (EVM) வாக்காளர் தாம் அளித்த வாக்கினைச் சரிபார்க்கும் கருவிகளும் (VVPAT), இந்தியத் தேர்தல் ஆணையத்தால் வரையறுக்கப்பட்ட பாதுகாப்பு நெறிமுறைகளின்படி, இருப்புக் காப்பிற்கான காப்பறையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.

காப்பறையின் பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கண்காணிப்பதற்காகத் தங்களின் பிரதிநிதிகளை அனுப்புமாறும், அவர்கள் பாதுகாப்பு வளையத்தின் உள் சுற்றுக்கு வெளியே தங்கி கண்காணிக்காலாம் என, தேர்தலில் போட்டியிடும்அனைத்து வேட்பாளர்களுக்கும் மாவட்டத் தேர்தல் அதிகாரியால் எழுத்து வடிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர்களுக்காக காப்பறையின் கண்காணிப்பு காமிரா ஒளிபரப்பிற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. வாக்கு எண்ணுகை நாளன்று, தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் / அவர்களின் பிரதிநிதிகள் மற்றும் இந்தியத் தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்ட மத்தியப் பார்வையாளர்(கள்) முன்னிலையில், வீடியோ பதிவு செய்யப்பட்டு காப்பறை திறக்கப்படும்.

"தேர்தல் திருவிழா – தமிழ்நாட்டின் பெருவிழா என்று தமிழ்நாடு தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா சிக்கல் பொ. கணபதி

ஏப்ரல் 26 (1996)



நாகை மாவட்டம், சிக்கல் கிளைச் செயலாளர், மூன்று முறை ஒன்றியச் செயலாளர், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு ஆகிய பொறுப்புகளில் பணியாற்றியவர்.

சிக்கல் ஊராட்சி மன்றத்திற்கு ஐந்துமுறை போட்டியின்றி தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். நாகை ஒன்றியப் பெருந்தலைவராகவும், கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கியின் இயக்குநர்களில் ஒருவராகவும் பணியாற்றியவர்.

இந்தி எதிர்ப்புப் போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர். மிசா சிறைவாசத்தில் ஓராண்டு காலம் சிறையில் இருந்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா குமரன் (எ) குமாரசாமி

ஏப்ரல் 26 (2024)



தி.மு.கழகம் தொடங்கிய போதே உறுப்பினராகி, மயிலாடுதுறை சுற்றுப் பகுதியில் கழகப் பணியாற்றியவர்.

நெருக்கடி கால மிசா சட்டம் நடைமுறையில் இருந்தபோது, சீர்காழிக்கு வந்த முத்தமிழறிஞர் கலைஞரை தைரியமாக தனது வீட்டிற்கு அழைத்து உணவளித்தார். இதன் காரணமாக 'மிசா' சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

சீர்காழி, தரங்கம்பாடி, மயிலாடுதுறை, குத்தாலம் ஆகிய வட்டங்களில் உள்ள பள்ளிகளுக்கு "புரவலர் நிதி" வழங்கி கல்வி வளரபாடுபட்டவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**